

ஏர் 8 • உழவு 10 • திருவள்ளுவர் ஆண்டு 2054
விலை ரூ.20/- • அக்டோபர் 2023 (புரட்டாசி - ஐப்பசி)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண்.: 44/2016
பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

தலைவர் : K.K.ரமேஷ்
செயலாளர் : M.அமராபதி
பொருளாளர் : V.R.பாலசுப்பிரமணியன் @ இசைபாலு
துணைத்தலைவர்கள் : வீ.க.செல்வக்குமார்
: V.P.வீரப்பன்
இணைச்செயலாளர்கள் : C.அரவிந்தன்
: P.ரவி
தணிக்கையாளர் : R.பாலசந்திரன்

**செயற்குழு உறுப்பினர்கள்**

M.பொன்னுசாமி
K.சந்திரமோகன்
டத்தோ S.பிரகதீஷ்குமார்
P.V.கல்யாணசுந்தரம்
டாக்டர் S.ராஜாமணி
K.ஜெகதீசன்
R.சண்முகவேல்
K.K.முருகன்
C.கொங்குவேள்
S.சீனிவாசன்
விசா M.சண்முகம்
D.S.சந்திரசேகர்
S.ஜெகநாதன்
K.நித்தியானந்தன்
R.கந்தகார்த்திக்
P.பிரேம்குமார்
சாந்தி சிவசண்முகம்

**Published by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No:34 Srinivasa Perumal Sannathi 1st St,
Royapettah, Chennai 600014.

**Printed by** :
A.Sheik Dawood, Dawood Graphics,
No.63,Muthu Mudali St, Royapettah, Chennai-600 014.

**Editor K.K.Ramesh**

# விழாத் தலைவர்



கொங்குமாமணி

திரு. **Dr. K.P. இராமசாமி** அவர்கள்

Chairman, KPR Groups, Coimbatore

சாதாரண பின்னணியில் பிறந்து, சாதனைப் படிக்கட்டுகளில் ஏறமுடியும் என்பதற்கான எடுத்துக்காட்டு. வெறுங்கை என்பது மூடத்தனம் – விரல்கள் பத்தும் மூலதனம் என்ற அழகான கவிதை வரிகளுக்கு அழுத்தமான காட்சி, முயற்சியும், பயிற்சியும் இருந்தால் வானம் வளைந்து வணக்கம் சொல்லும் என்பதற்கான வாழ்க்கையின் நிரூபணம் கே.பி.ஆர். மில் லிமிடெட்டின் சேர்மன் திரு. கே.பி. இராமசாமி அவர்கள்.

கோவை பெருந்துறைக்கு அருகில் கன்னியம்புதூர் என்கிற குக்கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்தவர். பத்தாம் வகுப்பு படிக்கும் போதே அவரை விவசாயத்தில் ஈடுபடுத்த ஆர்வம் காட்டினால் அவரது அப்பா பழனிச்சாமிக்கவுண்டர்.

விவசாயத்தில் சிலகாலம் ஈடுபட்டார், அது அவர் விருப்பதுக்குரிய தொழிலாக இல்லை. இன்னும் இன்னும் உயரத்துக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவரின் கண்ணில் பட்டது பவர்லூம் தொழில். 1971ல் உறவினரிடமிருந்து கடனாக வாங்கிய எட்டாயிரம் ரூபாய்தான் முதல் முதலீடு. உழைப்பு, உழைப்பு, உழைப்பு மூலம் பவர்லூம் பிசினஸில் வெற்றி கண்டார். அடுத்து திருப்பூரில் ஜவுளி ஏற்றுமதித் தொழிலில் இறங்கினார். அதிலும் வெற்றி கண்டபின் மில் தொடங்கும் எண்ணம் உருவானது.

1995ல் சத்தியமங்கலத்தில் ஆறாயிரம் ஸ்பிண்டில்களுடன் தன்னுடைய முதலாவது மில்லினை தொடங்கினார். தொழிலாளர்களை தங்களுடைய வளாகத்திலேயே தங்க வைப்பதன் மூலம் தனது நிறுவனத்தை தொடர்ந்து முன்னேற்றினார். 2001ல் கருமத்தம்பட்டியிலும், 2003ல் நீலாம்பூரிலும், 2005ல் அரசூரிலும் என்று அடுத்தடுத்து மில்கள் பெருக ஆரம்பித்தன.

இவரது அயராத உழைப்பும், நிர்வாகத் திறமையையும் பார்த்த வெளிநாட்டு பிரைவேட் ஈக்விட்டி நிறுவனங்கள், கே.பி.ஆர். மில்லில் முதலீடு செய்தன. வெளிநாட்டு முதலீடா வேண்டவே வேண்டாம் எனப் பலரும் அஞ்சும் காலத்தில் இவர் எடுத்த இந்த முடிவு திரு. கே.பி. இராமசாமியின் துணிச்சலுக்கும் தொலைநோக்குமான சான்றுகள்.

# விழா முன்னிலை



திரு. **E.R. ஈஸ்வரன்** B.E., MLA., அவர்கள்
முன்னாள் துணைத்தலைவர்,
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
Managing Director, Stanfab Apparels Pvt Ltd.,
General Secretary, KMDK.

நாமக்கல் மாவட்டம் கொக்கராயன்பேட்டை என்ற ஊரில் சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப் படிப்பை நாமக்கல் மாவட்டம் கொடக்கராயன்பேட்டை ஆரம்பப் பள்ளியிலும், திருச்செங்கோடு விட்டம்பாளையம் அரசு மேல்நிலையிலும் பயின்றார். 1983ல் சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் பிரிவில் பட்டம் பெற்றார். கல்லூரி நாட்களில் சென்னை பல்கலைக்கழகத்திற்காகவும், சேலம் மாவட்ட அணிகளுக்காகவும் கைப்பந்து போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

1985ஆம் ஆண்டு சுயதொழில் தொடங்கினார். 1986ஆம் ஆண்டு சென்னையில் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டுகின்ற தொழிலை Maxis Construction என்ற பெயரில் தற்போது வரை சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார். 1995ஆம் ஆண்டு முதல் ஆயத்த ஆடை தொழில் நிறுவனத்தைத் தொடங்கி உலகில் உள்ள பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார். 2000-2002ஆம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் அலுவலகத்தில் அலுவலகத்தை தொடங்கி அங்கேயே தங்கி ஆடைத் தொழிலை விரிவுபடுத்தி 15 இடங்களில் தொழிற்சாலைகளை நிறுவி 4000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளராக 4 ஆண்டுகளும், துணைத்தலைவராக 6 ஆண்டுகளும் பணியாற்றியவர். கொங்கு நண்பர்கள் சங்கத்தில் செயல்பாடுகள் பார்த்து கொங்குநாட்டு மக்களால் அரசியலுக்கு இழுக்கப்பட்டவர்.

2007ஆம் ஆண்டு கொங்கு வேளாளக்கவுண்டர் பேரவையின் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார். தற்போது கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளராக உள்ளார். பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்களை சந்தித்து தற்போது திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்லாம் மொத்த கொங்கு நாட்டிற்குமான குரலாக சட்டமன்றத்தில் பேசி வரும் இவரது உரைகள், முதலமைச்சர், சபாயாகர் உள்ளிட்ட அனைவராலும் கவனிக்கப்படுகிறது. நேர்மையான சட்டமன்ற உறுப்பினராக அரசு திட்டப்பணிகளை ஆய்வு செய்து பொதுமக்களின் வரிப்பணம் சரியாக செலவிடப்படுகிறதா என்று உறுதி செய்கிறார். கொங்கு நாட்டு மக்களுக்கு அரசியல் அங்கீகாரம் பெற்று, வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்த உறுதுணையாக புரிவது மட்டுமல்லாமல், தமிழக விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்ற வேண்டும் என்பதும், விவசாய விளை பொருட்களின் விலை கட்டுபடியாகவும், படித்த இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி நமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அயராது உழைத்துக் கொண்டுள்ளார்.

# கொங்கு ஆன்மீக செம்மல்



கௌமார மரபு சிரவை ஆதீனம் சீர்வளர் சீர்
**குமர குருபர அடிகளார்** அவர்கள்
கௌமார மடாலயம், கோவை

தமது இருபத்து நான்காம் வயதில் திருமடத்தின் பொறுப்பை ஏற்றார். ஐந்து முறை தஞ்சைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். 400க்கும் மேற்பட்ட நூல்களை தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் தமிழாய்வு மையத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார். கந்தசாமி சுவாமிகளின் பேரூர் இலக்கியங்களை ஆய்வு செய்து சுவாமிகள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

தவத்திரு இராமானந்த அடிகளார் உயர்நிலைப்பள்ளி, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கௌமார சுசீலா பன்னாட்டு உறைவிடப் பள்ளி ஆகிய பள்ளிகளின் செயலாளராக சுவாமிகள் கல்விப்பணி ஆற்றி வருகிறார். கௌமாரம் பிசாந்தி சிறப்புப்பள்ளி (மனநலம் குன்றியோர் பள்ளி) சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

தமது பள்ளிகள் மூலமாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக சுமார் 5 கோடி அளவில் வழங்கியுள்ளார். பொருளாதாரத்தில் பின்தங்கிய அல்லது பெற்றோர் இல்லாத சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு (அன்பு இல்லம் ) வாயிலாக பள்ளிகளில் இலவசக் கல்வி, தங்கும் விடுதி, உணவும் கொடுத்து அவர்களை கல்வியில் மேம்படுத்தி வருகின்றார்.

ஐ.நா. சபையில் 21.03.2019 அன்று சுவாமிகள் வீழ்நிலை மனவோட்ட நாள் நிகழ்வில் தாய்மொழி தமிழில் உரையாற்றினார். அங்கு உரையாற்றிய ஒரே ஆதினம் சிரவை ஆதினம் நான்காம் குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. பல வெளிநாடுகளுக்கு ஆன்மீகப்பயணம் மேற்கு ஆன்மீக சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். கௌமார மடாலயம் சார்ந்து வரும் கௌமார அமுதம் மாத இதழின் சிறப்பாசிரியராக உள்ளார். இந்த இதழ் 21 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது. கௌமாரத்தின் கோட்பாடான கொல்லாமையை மக்களிடம் பின்பற்றும்படி சுவாமிகள் வலியுறுத்தி வருகின்றார்.

ஊடகப்பிரிவின் வாயிலாக 2 லட்சத்து 50 ஆயிரம் பார்வையாளர்கள் மடத்தின் செயல் பாடுகளையும், நிகழ்வுகளையும் கண்டு வருகிறார்கள். மடாலய பள்ளி மாணவர்களது ஆன்மீக சொற்பொழிவு, திருப்புகழ் பாடல்கள் நாளும் பதிவு செய்யப்பட்டு இணை வழி மூலம் ஒளிபரப்படுகிறது. இதுவரை மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பதிவுகள் பதிவு செய்யப்பட் டுள்ளது. சுமார் 10 கோடி பேர் இப்பதிவுகளை பார்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



திரு. **K. ராமசாமி** அவர்கள்,
Chairman, *Roots Group of Companies*, Coimbatore

திரு. கே.ராமசாமி 1948 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி கோவை கணபதியில் பிறந்தார். இவர் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். அவரது பள்ளி நாட்களில், அவரது பொழுதுபோக்கு ஆட்டோமொபைல் ஆகும், இது ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் மீது வெறித்தனமாக வளர்ந்தது, 1969 இல் அமெரிக்காவின் லிங்கன் டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டில் முதுகலைப் பட்டம் பெற்றார், 1970 இல், அவர் அமெரிக்கன் பெயரில் ஒரு சிறிய நிறுவனத்தைத் தொடங்கினார். மூன்று ஊழியர்களுடன் வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பதற்கான ஆட்டோ சேவை. இப்போது அது 9 ஆக வளர்ந்துள்ளது

ரூட்ஸ் குரூப்பின் கீழ் 4000 பேருக்கு மேல் வேலை செய்யும் நிறுவனங்கள், ரூட்ஸ் குழுமத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள்: அமெரிக்கன் ஆட்டோ சர்வீஸ் (பி) லிமிடெட், ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ரூட்ஸ் மல்டிகிளீன் லிமிடெட் – ஹகோ வெர்க் ஜிஎம்பிஹெச், ரூட்ஸ் மல்டிகிளீன் இன்க் உடன் கூட்டு முயற்சி. ரூட்ஸ் காஸ்ட் பிரைவேட் லிமிடெட், ரூட்ஸ் ஆட்டோ புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ரூட்ஸ் பாலிகிராஃப்ட், ரூட்ஸ் பிரசிஷன் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,

இந்த நிறுவனங்கள் எலெக்ட்ரிக் ஹோர்ம்ஸ், ஏர் ஹோர்ம்ஸ், ஆட்டோமோட்டிவ் எலக்ட்ரானிக்ஸ், கிளீனிங் மெஷின்கள், மெடிக்கல் மற்றும் ஏரோ ஸ்பேஸ் உதிரிபாகங்கள், அலுமினியம் வார்ப்புகள், பணிச்சூழலியல் ஃபிடியூமிச்சர்ஸ், எலக்ட்ரிக் வாகனங்கள், துல்லியமான கருவிகள் & டியோஸ், பிளாஸ்டிக் ஊசி வடிவ பாகங்கள் போன்றவற்றை 40ரூ க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கின்றன. ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திரு. ராமசாமி ஒரு சுயமாகத் தொழிலதிபர் என்பதால், திரு. ராமசாமிக்கு உத்யோக் ஸ்ரீ விருது, உத்யோக் ரத்தன் விருது, இந்தியாவின் ரத்தினம், பாரத ஜோதி விருது, ரோட்டரி பினாக்கிள் ஆஃப் எக்ஸலன்ஸ் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகிய விருதுகள் கோவையினால் வழங்கப்பட்டுள்ளன. மேலாண்மை சங்கம், டேர் டு ட்ரீம் விருது

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சம்மேளனம் SAP போன்றவற்றுடன் இணைந்து,

கோயம்புத்தூர் இந்திய தொழில் கூட்டமைப்பு தலைவராக திரு. கே.ராமசாமி இருந்தார். கல்லாரில் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த மகாராஜால் நிறுவப்பட்ட 100% குடியிருப்புப் பள்ளியான சச்சிதானந்த ஜோதி நிகேதனின் நிர்வாக அறங்காவலராக உள்ளார். அவர் ஜெர்மன் இந்தியன் ரவுண்ட் டேபிள் (GIRT) நிறுவனர் ஆவார்.

கோயம்புத்தூர் பகுதியின் ஒருங்கிணைந்த யோகா நிறுவனத்தின் தலைவர் திரு. ராமசாமி இது அமெரிக்காவின் ஒருங்கிணைந்த யோகா நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது உலகின் இந்த பகுதியில் யோகா மற்றும் அதன் வளமான உள்ளார்ந்த நன்மைகளை கற்பிப்பதில் முன்னணியில் உள்ளது. R.K Nature Cure Home இன் நிர்வாக அறங்காவலராகவும் உள்ளார், பெரும்பாலான நோய்களுக்கு எந்தவித பக்க விளைவுகளும் இல்லாமல் இயற்கை உணவை வழங்குகிறார்.



**திரு. T. சதீஷ்குமார் அவர்கள்**
Chairman & Managing Director,
Milky Mist Dairy Food Pvt. Ltd., Erode.

வாழ்க்கையில் ஆயிரம் தடைக்கல்லப்பா
தடைக்கல்லும் உனக்கொரு படிக்கல்லப்பா

பல அடிகளைப் பெற்ற பின்பு தான் விலை மதிப்பில்லாத வைரம் நம் கைகளில் மின்னுகிறது. தன் திறமையையும், உழைப்பையும் சாமர்த்தியமாக கையாளத் தெரிந்தவர்கள் தான் இன்று வரலாற்றில் பேசப் படுகிறவர்களாக இருக்கிறார்கள். ஈரோடு கிராமத்தில் பிறந்து வளர்ந்த சதீஷ் குமார் அவர்களின் குடும்பத்திற்கு தயிர்பாளையம் எனும் கிராமத்தில் 20 ஏக்கர் நிலம் இருந்தது. வருமானத்தைப் பெருக்க சகோதரருடன் இணைந்து பால் கொள்முதல் வர்த்தகத்தில் ஈடுபட்டார். மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்திற்கான விதையை விதக்கப் போகிறோம் என்பதை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. 1980களின் இறுதியில், அருகாமை பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் இருந்து பால் கொள்முதல் செய்து, பெங்களூருவில் பால் சார்ந்த உற்பத்தி செய்கிறவர்களுக்கு மொத்தமாக கேன்களில் நிரப்பி நாள் ஒன்றுக்கு 3,000 லிட்டர் பால் அனுப்பி வைத்தனர். சதீஷ் குமாரின் மாமா 1990 ல் வர்த்தகத்தில் இருந்து விலகி கொண்டார். படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு 1992ல் சதீஷ் அவர்கள் இந்த தொழிலை ஏற்கிறார். புதிய யுக்திகளைக் கையாண்டால் மட்டுமே நிலைத்து நிற்க முடியும் எனும் போது புலப்பட்டது பன்னீர். 30 வருடங்களுக்கு முன் பெரிய நட்சத்திர ஓட்டல்களில் மட்டுமே இது கிடைத்தது.

சோதனை முயற்சியாக 300 லிட்டர் பாலில் பன்னீர் எடுக்க முயற்சித்தார். அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. பல வழிகளிலும் முயன்று போராடி கற்றுக் கொண்டார். பெங்களூருவில் உள்ள தேசிய பால்வள ஆராய்ச்சி மையத்தில் தொழில்நுட்பம் அறிந்த நிபுணர்கள் மூலம் பயிற்சி பெற்றார். சில்லறை விற்பனை சந்தை நல்ல வாய்ப்பாக இருக்கும் என கணித்தவர், தனது நிறுவன தயாரிப்புக்கு மில்கி மிஸ்ட் என்று பிராண்ட் ஆக்கினார். 1998 ல் ரூ.5 லட்சம் முதலீட்டில் உற்பத்தி ஆலை அமைத்தனர். 1990களில் மில்கி மிஸ்ட் நடுத்தர உணவகங்கள் வரை பிரபலமானது.

2001ல் சித்தோடில் சொந்த இடத்தில் நிறுவன உற்பத்தி ஆலை செயல்படத் துவங்கியது. பெருந்துறை அருகே, 85 ஏக்கர் நிலப்பரப்பில் மெகா தொழிற்சாலை ஒன்றை 2018 ம் ஆண்டில் உருவாக்கியது. உலகத்திலேயே பன்னீர் அதிகம் தயாரிக்கும் நிறுவனம் மில்கி

மிஸ்ட் நிறுவனம் ஆகும். மேலும் சீஸ், தயிர், வெண்ணை, நெய், யோகர்ட் போன்றவைகளையும் மேலும், UHT தொழில் நுட்ப முறையில் மில்க்சேக், பால், லஸ்ஸி, மோர் போன்ற தயாரிப்புகளையும் உருவாக்கி வருகிறது. இதன் மூலம் கடந்த வருடம் ஆண்டு வருமானம் 1450 கோடியாக உயர்ந்துள்ளது.

ஐஸ் கிரீம் மற்றும் sweetened condensed Milk ஆகியவற்றை அறிமுகம் செய்துள்ளது. smartchef மற்றும் Mistylite என்ற பெயரில் வேறு சில தயாரிப்புகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் இந்நிறுவனம் Asal மற்றும் Briyas என்ற நிறுவனங்களையும் தன் வசம் கொண்டுள்ளது. இடைத்தரகர் இல்லாமல், ஈரோடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதி விவசாயிகளிடம் இருந்து நிறுவனம் நேரடியாக தினமும் 8 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்கிறது. கால்நடைகளுக்கான தரமான தீவனமும் Super Nova என்ற தயாரிப்பில் குறைந்த விலையில் வழங்கி வருகிறது. இதன் மூலம் நிறுவனத்திற்கு தரமான பால் கிடைப்ப தோடு, 75,000 விவசாயிகளுக்கு சீரான வருமானம் கிடைக்கிறது. சித்தோட்டில் உள்ள அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக பேருந்து வசதியையும் செய்து கொடுத்துள்ளார். ஈரோடு மாவட்டம் துடுப்பதி ஊராட்சியில் வசிக்கும் 10500 மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 30 கிலோ வாட் சோலார் அமைத்து கொடுத்துள்ளது. KAIFA என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து ஏரி குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவற்றை தூர்வாரும் பொருட்டு, JCB இரண்டை வாங்கி கொடுத்துள்ளது. சதீஷ் குமார் நிறுவனத்தை கவனித்து வர, அவரது மனைவி அனிதா சதீஷ் குமார் அவருக்கு உறுதுணையாக நிறுவனத்தில் உதவி புரிந்து வருகிறார். சஞ்சய் மற்றும்

நிதின் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். துவளாதே, தடைகளை கண்டு அஞ்சாதே, எழுந்து ஓடு. உன் சிந்தனைகளுக்கு சிறகைக் கொடு, கற்பனைகளுக்கு வண்ணத்தைக் கொடு நிச்சயம் நீ வெல்வாய் என்கிறது 30 வருடங்களை கடந்து வந்த சதீஷ்குமாரின் சாதனை பயணம்.



தெய்வத்திரு **K.R.P. மோகன்** அவர்கள்
முன்னாள் தலைவர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
திருமதி **சக்தி மோகன்** அவர்கள்
MD, Galfan Engineering Pvt Ltd.,

க.ரா.ப. மோகன் அவர்கள் தந்தை பழனிச்சாமி மற்றும் தாய் பழனியம்மமாள் அவர்களுக்கு இரண்டாவது மகனாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள அத்தானி குப்பாண்டபாளையம் கிராமத்தில் பிறந்தார். அவருடைய ஆரம்பப் பள்ளி படிப்பை திருபாரதுறையில் உள்ள விவேகானந்த பள்ளியில் படித்தார். கோவையில் உள்ள சி.ஐ.டி. கல்லூரியில் தொழில்துறை பட்டப்படிப்பை 1976ஆம் ஆண்டு முடித்தார். அவருக்கு சக்தி மோகன் என்ற மனைவியும் ஸ்ருதி மோகன் B.Tech., MS (USA) என்ற மகளும் உள்ளார்கள்.

தன்னுடைய விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பாலும், 1982ஆம் ஆண்டு Bharath Insulator என்ற நிறுவனத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தினார். தொழில் வளர்ச்சி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வளர்ந்து வந்த காரணத்தால், தன்னை காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி கொண்டு 1986 ஆம் ஆண்டு Galfan Enginnering Private Limite என்ற நிறுவனத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி பலருக்கு வேலைவாய்ப்பை கொடுத்து அவர்கள் வாழ்வில் மேம்படச் செய்தார்.

கொங்கு நண்பர்கள் சங்கம் மற்றும் ரோட்டரி நல சங்கத்தில் தலைவராக இருந்து பல நலத்திட்டங்களை செய்துள்ளார். ஜனவரி 24ம் நாள் 2010 ஆம் ஆண்டு அவர் மறைந்த பின் அவருடைய மனைவி மற்றும் மகள் கம்பெனியை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

# கொங்கு மாமணி



திருமதி **சரஸ்வதி கண்ணையன்** அவர்கள்
Trustee,
Hindusthan College of Arts & Science, Coimbatore.

கொங்கு நாட்டு தளமாகிய ஈரோடு மாவட்டத்தில் கொடுமுடி என்ற ஊரில் 1955 ஆம் ஆண்டு ஆறுமுகக்கவுண்டர் முத்தாயி அம்மாள் இவர்களின் ஒரே மகளாக விவசாயக் குடும்பத்தில் தோன்றியவர்தான் இன்று கல்வி பணியிலும் 43 ஆண்டுகால தொழில் துறையிலும் சிறந்து விளங்கும் டாக்டர். டி.ஆர்.கே சரஸ்வதி கண்ணையன் அவர்கள். ஒன்றரை வயதில் தந்தையை இழந்த இவர் ஆரம்பகால பள்ளிப்படிப்பை தன் பிறந்த ஊராகிய கொடுமுடியில் கற்றுத்தேர்ந்தார். 1977 ஆம் ஆண்டு கொங்கு ரத்னா திரு. டி.எஸ்.ஆர் கண்ணையன் அவர்களை கரம் பிடித்தார். சக்திவேல் ராஜா, பிரியா என்ற இரண்டு பிள்ளை செல்வங்கள் பிறந்தனர். தங்களது சீரிய முயற்சியால் 1980ஆம் ஆண்டு கோவை ஆவாரம் பாளையம் பகுதியில் இந்துஸ்தான் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்தை துவங்கினார்கள். 1992 ஆம் ஆண்டு இந்துஸ்தான் அறக்கட்டளையை துவங்கி அறப்பணியோடு கல்விப்பணியும் செய்யவேண்டும் என்ற அவரது தாளாத விருப்பத்தின் காரணமாக 1998 ஆம் ஆண்டு இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியை 240 மாணவர்களோடு துவங்கினார். இன்று 25 ஆயிரம் மாணவ கண்மணிகள் பயிலும் 12 கல்வி நிறுவனங்களாக உயர்ந்துள்ளது. 2004ஆம் ஆண்டில் மகன் திரு.சக்தி வேல் ராஜா அவர்கள் சந்தித்த சாலை விபத்தில் இருந்து அவரைக் காத்து நின்ற இவர் தன் கல்வி நிறுவனங்களை தன் அயராத உழைப்பால் உயர்ந்த பாதையில் வழி நடத்த ஆரம்பித்தார்.

கோவையில் கோசாலைக்கு தன் பங்களிப்பை தந்தார். ஏழை எளிய மக்களுக்கு உதவுவதோடு துப்புரவு பணியாளர்களுக்கு, மாற்று திறனாளிகளுக்க உதவிகள் செய்துவருகிறார் . தமிழகத்தின் பல கோவில் திருப்பணிகளுக்கு நிதி உதவி செய்துவருகிறார் . கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் பாட்டுக்கவி பாரதிக்கு மணிமண்டபம் கட்டி சிறப்பித்திருக்கிறார். இளைப்பாறுதல் மண்டபமும் கட்டி தந்துள்ளார். தன் கல்வி நிறுவனத்தில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு நூறு சதவீதம் கல்வி கட்டண சலுகை அளிப்பதோடு வருடம் தோறும் பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள கல்வி கட்டணத்தை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறார்.

கொரோனா காலகட்டத்தில் தன் இரு மருத்துவமனைகளையும் இலவச மருத்துவ சேவைக்காக வழங்கியதோடு. தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒரு கோடி ரூபாய் கொரோனா நிதியும் வழங்கினார். தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களின் வெள்ள நிவாரண நிதிகளுக்காக நன்கொடை வழங்கியதோடு தன் மாணவ தன்னார்வலர்களை அந்த இடங்களுக்கு அனுப்பி உதவிகள் செய்து நிவாரண பொருட்களையும் வழங்கினார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து பதவி வகித்தவர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் தான் இவர்.

கல்வி, தொழில் துறை என சிறப்பித்து இவர் பெற்ற விருதுகள் பாரத் கவுரவ் விருது, ராஜிவ் காந்தி சிரோன்மணி விருது, இந்திரா காந்தி ஸத்பாவனா விருது, சிறந்த பெண் தொழில் முனைவோர் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது. சர்வதேச தமிழ் பல்கலைக்கழகம் வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டம், விமன் எம்பவர்மெண்ட் விருது, டாக்டர் அப்துல் கலாம் சாதனை விருது, டைம்ஸ் ஆப் இந்தியா வழங்கிய சிறந்த கல்வியாளர் விருது, டில்லியில் முன்னாள் குடியரசு தலைவர் திரு .பிரணாப் முகர்ஜி அவர்களிடம் பெற்ற கல்வி சாதனை விருது ,அரிமா சங்கங்கள் வழங்கிய பல்வேறு விதமான சாதனை விருது என்ற விருதுகளோடு இன்று நம் கொங்கு சமுதாய மக்கள் சார்பாக சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வழங்கும் கொங்குமாமணி விருதும் சேர்ந்துள்ளது பெருமைக்குரியதே! இவருடைய கணவர் திரு. டி.எஸ்.ஆர் கண்ணையன் அவர்களும் இதற்கு முன்பு கொங்கு ரத்னா விருது வாங்கி இருப்பதும் குறிப்பிட தகுந்ததாகும்.

# கொங்கு சாதனையாளர்



திரு. **சங்கர் வானவராயர்** M.B.A., அவர்கள்
Joint Correspondent,
Kumaraguru College of Technology, Coimbatore

திரு. சங்கர் வாணவராயர் ஒரு திறமையான வணிக மற்றும் நிறுவனத் தலைவர், கலை, வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் உற்சாகமான புரவலர், ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோர் மற்றும் ஊக்கமளிக்கும் கல்வியாளர். 15 ஆண்டுகளுக்கும் மேலாக பரவியிருக்கும் மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட தொழில்முறை வாழ்க்கையில், அவர் சக்தி குழுவிற்குள் வணிகங்கள், கல்வி நிறுவனங்கள், சமூக மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) ஆகியவற்றில் தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். குழுக்களை உருவாக்குதல், மூலோபாய திட்டமிடல், திட்டங்களை நிர்வகித்தல் மற்றும் வணிகம் (ஜவுளி, வாகனம், நிதிச் சேவைகள், விவசாய உணவுகள், சில்லறை வணிகம்), கல்வி (கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்) போன்ற பல்வேறு களங்களில் செயல்பட்டதில் அவர் நிரூபிக்கப்பட்ட சாதனை படைத்துள்ளார். கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், சமூகம் மற்றும் சமூக மேம்பாடு, சர்வதேச இளைஞர் விவகாரங்கள், குறுக்கு தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டணிகள் போன்றவை.

2011–2012 இல் இளம் இந்தியர்களின் (YI) தேசியத் தலைவராக, காமன்வெல்த் ஆசிய இளம் தொழில் முனைவோர் கூட்டமைப்பை (CAAYE) உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றினார். அவர் இந்திய பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கினார் மற்றும் ஹாங்காங்கில் (2011) மற்றும் சீனாவில் (2012) BOAO மன்றத்தில் உலகளாவிய இளம் தலைவராக இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் மற்றும் காமன்வெல்த் வணிக மன்றம் லண்டன், CHOGM பெர்த் உச்சிமாநாடு (2011), G20 பிரான்ஸ் ஆகியவற்றில் முக்கிய உரைகளை ஆற்றியுள்ளார். மற்றும் ஆஸ்பென் இன்ஸ்டிடியூட் கருத்தரங்கு, இத்தாலி (2010). வானவராயர் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகப் பொறுப்பேற்று, தனது முன்னோர்களின் பாரம்பரியத்தை வைத்து, கொங்கு மண்டலத்தின் கட்டிடக்கலை, பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் வரலாற்றைப் பாதுகாக்கவும், சித்தரிக்கவும் சுற்றுப்பயணங்கள், விரிவுரைகள், புத்தக வெளியீடுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளார். சிறுதுளியின் அபெக்ஸ் பாடியின்

உறுப்பினராக, கல்வித் திட்டங்கள், தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் பரந்த சமூகப் பங்கேற்பை வளர்ப்பதன் மூலம் நீர் பாதுகாப்பு மற்றும் புத்துணர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல திட்டங்களை அவர் வழிநடத்தினார்.

குமரகுரு நிறுவனங்களின் தலைவராகவும், உயர்கல்விக்கான தேசிய கவுன்சிலின் துணைத் தலைவராகவும் உள்ள அவர், இந்திய உயர்கல்வி முறையை நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள், கற்றலை மையமாகக் கொண்ட கல்வித் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு சார்ந்த தொழில் கூட்டாண்மை மூலம் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். மற்றவற்றுடன் சர்வதேச ஒத்துழைப்பு. உயர் கல்வி, வெளிநாட்டு விவகாரங்கள், தொழில் முனைவோர், குடும்ப வணிகம் மற்றும் திறன் மேம்பாடு போன்ற துறைகளில் ஜியோனல் (தென்னிந்தியா) மற்றும் தேசிய அளவில் CII க்குள் வியூகம், நிகழ்வுகள், வெளியீடுகள், தகவல் தொடர்பு மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றை ஷங்கர் வழிநடத்தியுள்ளார்.



# கொங்கு நவீன வேளாண் வளர்ச்சி முன்னெடுப்பாளர்

**திரு. K. சண்முகசுந்தரம் B.E., M.P., அவர்கள்**
**தலைவர், மகிழும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்**
**பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர்**

1990ஆம் ஆண்டு குமரகுரு கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்ற பிறகு தீவிர அரசியலில் ஈடுபடுத்தி கொண்டவருக்கு திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள் 2009 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தும் வெற்றி நழுவியது. பின்னர் 2019ல் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுத்த பொள்ளாச்சி நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட கிடைத்த வாய்ப்பை வெற்றியாக்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற நாள் முதலே தொகுதி சார்ந்த கோரிக்கைகளை முன்னெடுத்த அவரின் முயற்சியில் பழனி, மதுரை மற்றும் ராமேஸ்வரம் செல்ல 4 புதிய விரைவு ரயில்களை பெற்றுத்தந்தார்.

கோவையில் நடைபெற்று வந்த சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மை பள்ளியை மீண்டும் திறக்கவும் முக்கிய பங்காற்றினார். பொள்ளாச்சிக்கு Town of Export Excellence என்ற அங்கீகாரத்தை மத்திய அரசிடம் இருந்து பெற்று தந்தார்.

பொள்ளாச்சி பகுதியில் விவசாயிகள் பெருமளவு பயனடைய Farmer Producer Organisation என்று அழைக்கப்படும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார். மகிழும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் விதமாக பொள்ளாச்சி மற்றும் உடுமலை தொழில் வர்த்தக சபை மூலமாக விவசாயப் பிரிவுகளை தொடங்கி விவசாயிகளுக்கான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றார்.

பெண்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு தனியார் மின்னணுவியல் நிறுவனத்தில் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட சுமார் 1200 பெண்கள் பணியில் சேர்க்கப்பட்டு, முதற்கட்டமாக 120 பெண்கள் பயிற்சி டெல்லி சென்றுள்ளனர்.

10000 பெண்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று தந்து பெண்களின் வாழ்வை தரம் உயர்த்துவதை தனது இலக்காக வைத்து பணியாற்றி வருகிறார்.

# வெளிநாடு வாழ் கொங்கு பெண் சாதனையாளர்



செனட்டர் **சரஸ்வதி கந்தசாமி**
LLB (Hons.), LLM (London) **அவர்கள்**
**துணை அமைச்சர்,**
**தொழில் முனைவோர் மேம்பாட்டு கூட்டுறவு அமைச்சு, மலேசியா**

மலேசிய தொழில்முனையவார் மற்றும் கூட்டுறவு அமைச்சில் துணை அமைச்சராகப் பதவி வகிக்கும் திருமதி. சரஸ்வதி கந்தசாமி அவர்கள் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்.

2022 டிசம்பர் 10–ஆம் தேதி, மலேசிய மாமன்னர் அப்துல்லா அவர்களால், மலேசிய மேலவை உறுப்பினராக (Dewan Negara Senator) நியமிக்கப் பட்டார். அதே நாளில் திரு. அன்வார் இப்ராகிம் அமைச்சரவையில் (Anwar Ibrahim Cabinet) மலேசிய தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் கூட்டுறவு அமைச்சில் துணை அமைச்சராகவும் பதவியில் அமர்த்தப் பட்டார். மலேசிய மக்கள் நீதிக் கட்சியைச் சேர்ந்த சரசுவதி கந்தசாமி; மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராகீமின் பாக்காத்தான் அரப்பான் (Pakatan Harapan) கூட்டணியில் உதவித் தலைவர் பதவி வகிக்கிறார். அன்வர் இப்ராகீம் அமைச்சரவையில் 27 துணை அமைச்சர்கள் பதவி வகிக்கின்றனர்.

அத்துடன் மலேசிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள முதல் இந்தியப் பெண் ஆவார். பினாங்கு மாநிலத்தின் தலைநகரமான ஜார்ஜ் டவுன் நகர்ப் பகுதியில் பிறந்து வளர்ந்த சரசுவதி கந்தசாமி பினாங்கு லைட் சாலை பள்ளியில் (Convent Light Street, Penang) தன் தொடக்கக் கல்வியையும் உயர்நிலைக் கல்வியையும் பயின்றார். இங்கிலாந்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு வர்த்தகச் சட்டத் துறையில் முதுகலை பட்டம் (Master;s Degree in law at Universiy Of London) பெற்றார். அரசியலுக்கு முன்னர் இவர் வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்.

பொறுப்புகள் :

– வழக்கறிஞர்
– மலேசிய தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் கூட்டுறவு அமைச்சின் துணை அமைச்சர் (2022)
– சட்ட ஆலோசகர் தமிழ் மலர் நாளிதழ்

- மலேசிய மனிதவள அமைச்சு; திறன் மேம்பாட்டு நிதிக் கழகத்தின் (Skills Development Fund Corporation - PTPK) முன்னாள் தலைவர்
- பொதுச் செயலாளர், டாக்டர் அம்பேத்கர் நல வாரியம் (Dr. Ambedkar Welfare Board)

❖ YB செனட்டர் சரஸ்வதி கந்தசாமி பினாங்கு மாநிலத்தைச் சேர்ந்தவர் மற்றும் மலேசியாவில் அமைச்சரவை உறுப்பினராக நியமிக்கப்பட்ட முதல் இந்திய பெண் துணை அமைச்சர் ஆவார்.

❖ YB செனட்டர் லண்டன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வர்த்தக சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார், கடல்சார் ஆய்வுகளில் நிபுணத்துவம் பெற்றார்.

❖ YB செனட்டர் தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்கும் முன் தமிழ் மலர் செய்தித்தாளின் சட்ட ஆலோசகராகவும் பயிற்சியாளராகவும் இருந்தார். YB செனட்டர், மனித வள அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு நிறுவனமான திறன் மேம்பாட்டு நிதிக் கழகத்தின் (PTPK) தலைவராகவும் பதவி வகித்தார். YB செனட்டர் இன்னும் பார்ட்டி கெடிலன் ராக்யாட்டின் துணைத் தலைவராக பணியாற்றுகிறார்.



**Dr. P. ராஜு** M.S. (Surgery) அவர்கள்

**நிர்வாக இயக்குனர் – கொங்குநாடு மருத்துவமனை, கோவை.**
**நிர்வாக அறங்காவலர் – கொங்குநாடு அறக்கட்டளை –**
**கொங்குநாடு நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் காலேஜ், கோவை**

எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வில் அந்தியூர் உயர்நிலைப் பள்ளியில் முதல்மாணவனாக தேர்ச்சி பெற்ற இவர், 1974 ஆம் ஆண்டு தனது மருத்துவ படிப்பை கோவை மருத்துவக் கல்லூரியில் முடித்து கோவை கே.ஜி. மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ. வாக 1981ம் ஆண்ட வரை பணிறயாற்றினார். 1981–1983ம் ஆண்டில் மருத்துவ முதுகலை அறுசிகிச்சை பட்டப்படிப்பினை கோவை மருத்துவக்கல்லூரியில் முடித்தார்.


1983 முதல் 1988 வரை கோவை இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் அரசு மருத்துவராக பணியாற்றினார். 1988ல் கோவை 100 அடி ரோட்டில் 10 படுக்கை வசதிகளுடன் சர்ஜிக்கல் கிளினிக்கை ஆரம்பித்தார். குறைந்த செலவில் அறுவை சிகிச்சை அளிப்பவர் என்ற நற்பெயர் கிடைத்தது.

1991ல் 75 படுக்கைகளுடன் கொங்குநாடு மருத்துவ மனையை கோவை டாடாபாத்தில் உருவாக்கினார். ஏழை மற்றும் நடுதத்தர மக்களுக்கு சிறந்த சேவையினை அளித்ததனால் தற்போது 375 படுக்கைகள் கொண்ட பல்துறை மருத்துவமனையாக கொங்கு மண்டலத்தில் சிறப்பான மருத்துவமனையை நிர்வகித்து வருகிறார். கொங்குநாடு அறக்கட்டளையை ஏற்படுத்தில் அதன்மூலம் கல்வி சேவை மற்றும் மருத்துவ சேவை செய்து வருகின்றார். அறக்கட்டளை மூலம் கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கொங்குநாடு அறக்கட்டளை சார்பில் 2009ல் கொங்குநாடு நர்சிங் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நர்சிங் பட்டப்படிப்புகளும், பட்ட மேற்படிப்புகளும் வழங்கப்படுகின்றன. மேலும் பட்டயப் படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சிறிய மற்றும் பெரியவகை ஆபரேசன்களை வெற்றிகரமாக செய்துள்ளார்.

கஜா புயல் நிவாரண மருத்துவ முகாம், சுனாமி நிவாரண நிதி, குஜராம் பூகம்ப நிவாரண நிதி போன்றவைகளுக்கு உதவி செய்துள்ளார். கல்வி மற்றும் மலைவாழ் மக்களுக்கான மருத்துவ சேவைக்காக நீல் காந்த் சம்மான் விருது, டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருது, கேஜி மருத்துவமனை சார்பாக கோவையின் சிறந்த மருத்துவர் விருது உள்ளிட்ட எண்ணிலடங்கா விருதுகளை பெற்றுள்ளார்.

# கொங்கு மருத்துவ மேதை



**Dr. G. செங்கோட்டுவேலு** MD DM DNB FRCP
(Glasgow)FRCP(London) FSCAI FMMC FCSI, FACP
**அவர்கள்**
Senior Consultant & Interventional Cardiologist,
Apollo Hospitals, Chennai

டாக்டர். ஜி. செங்கோட்டுவேலு மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் பட்டம் பெற்றார், அதைத் தொடர்ந்து உள் மருத்துவம் மற்றும் இருதயவியல், பின்னர் பிரான்சில் உள்ள ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் டாக்டர் மேரி கிளாட் மோரிஸுடன் தலையீட்டு இருதயவியல் துறையில் தனது பெல்லோஷிப்பைப் பெற்றார். டாக்டர். ஜி. செங்கோட்டுவேலு, உயர் தாக்கக் காரணிகளைக் கொண்ட, மிகவும் புகழ்பெற்ற சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் பிரசுரங்களுடன் மிக உயர்ந்த கல்வி சாதனை படைத்துள்ளார். ஜர்னல் ஆஃப் அமெரிக்கன் காலேஜ் ஆஃப் கார்டியாலஜி, ஜர்னல் ஆஃப் கார்டியாலஜி–இன்டர்வென்ஷன்ஸ், ஐரோப்பிய ஹார்ட் ஜர்னல், யூரோ இன்டர்வென்ஷன், வடிகுழாய் மற்றும் கார்டியோவாஸ்குலர் இன்டர்வென்ஷன்ஸ், இதயம், நுரையீரல் மற்றும் இரத்த ஓட்டம் போன்ற உலகப் புகழ்பெற்ற பத்திரிகைகளில் அவரது படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது மற்றும் புகழ்பெற்ற பத்திரிகைகளில் 100 க்கும் மேற்பட்ட வெளியீடுகளைக் கொண்டுள்ளது, பல பாடப் புத்தகங்கள் மற்றும் 300 க்கும் மேற்பட்ட சுருக்கங்கள் மற்றும் வழக்கு ஆய்வுகளை எழுதுவதில் பங்களித்துள்ளது. அவரது விஞ்ஞான நற்பெயர் அவரது சகாக்கள் மத்தியில் உயர்வாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தல், ரேடியல் நடைமுறைகள், உயிர் உறிஞ்சக்கூடிய சாரக்கட்டுகள், IVUS மற்றும் OCT இரண்டையும் இமேஜிங் செய்வதில் அவர் ஒரு முக்கிய கருத்துத் தலைவராக உள்ளார் மேலும் 15 வெளியீடுகளுடன் நாட்டில் OCT இல் மிகப்பெரிய வெளியீடுகளைக் கொண்டுள்ளார். அவர் அப்பல்லோ குழும மருத்துவமனைகளில் TAVR திட்டத்தைத் தொடங்கினார் மற்றும் நவம்பர் 2015 இல் முதல் TAVR ஐ நிகழ்த்தினார். அதன் பின்னர், மெட்ட்ரானிக் கோர் வால்வ், Evolut R இல் அனுபவம் கொண்ட இந்தியாவில் மிகவும் அனுபவம் வாய்ந்த TAVR ஆபரேட்டர்களில் ஒருவர்.

மற்றும் Evolut PRO வால்வுகள், Edwards Sapien 3 Valves மற்றும் Indian Myval. அவர் PCR உடன் அதன் கல்வி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் மற்றும் VITAL (விஷனரி ட்ரான்ஸ்பார்மேடிவ் அடல்ட் லீமிங்) குழுவின் உறுப்பினராகவும்

ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் உள்ள இருதயநோய் நிபுணர்களிடையே நன்கு அறியப்பட்டவராகவும் உள்ளார்.

### விருதுகள் மற்றும் சாதனைகள்

- CCT-ஜப்பான் (2013) இல் சிறந்த சுருக்கம் விருது மற்றும் விருது
- மருத்துவ கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்குவதற்கான விருது–அப்போலோ
- மருத்துவமனைகள் 2013, 2016, 2017
- AICT 2012 இல் சிறந்த வழக்கு விருது–புது டெல்லி
- முதல் பரிசு–AICT 2008, தாய்லாந்து & எகனாமிக் டைம்ஸ் டாக்டர்ஸ் டே, 2018 இலிருந்து “இளம் இண்டர்வென்ஷனலிஸ்ட் விருது”
- “இன்ஸ்பைரிங் கார்டியலஜிஸ்ட்ஸ் ஆஃப் இந்தியா விருது” பெற்றது.

### பெல்லோஷிப்கள்

- ராயல் காலேஜ் ஆஃப் பிசிஷியன்ஸின் (லண்டன் & கிளாஸ்கோ) மற்றும் புகழ்பெற்ற டாக்டர் மேரி கிளாட் மோரிஸ் ஃபெலோவின் கீழ், பிரான்ஸ், பாரீஸ், இன்டர்வென்ஷனல் கார்டியாலஜியில் பெல்லோஷிப்
- கரோனரி ஆஞ்சியோகிராபி மற்றும் தலையீட்டிற்கான சொசைட்டியின் ஃபெலோ
- மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியின் ஃபெலோ

### TAVR அனுபவம்

- மெட்ரானிக் கோர் வால்வ், எவோலட் ராண்ட் எவோலட் புரோ வால்வுகள், எட்வர்ட்ஸ் சேபியன் 3 வால்வுகள் மற்றும் இந்தியன் மைவல் ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த இந்தியாவில் உள்ள மிகவும் அனுபவம் வாய்ந்த TAVR ஆபரேட்டர்களில் ஒருவர்
- அப்போலோ குழும மருத்துவமனைகளில் 2015 இல் முதல் TAVR ஐ நிகழ்த்தினார்.
- இந்தியாவில் முதன்முறையாக பைகஸ்பிட் பெருநாடி வால்வில் Evolut Pro Valve TAVR நிகழ்த்தப்பட்டது.
- இந்தியாவில் முதன்முதலில் ருமேடிக் அயோர்டிக் ஸ்டெனோசிஸுக்கு டிரான்ஸ்கேட்டர் பெருநாடி வால்வு சிகிச்சை அளிக்கப்பட்டது.
- தென்னிந்தியாவில் எட்வர்ட்ஸ் சேபியன் 3 வால்வை முதன்முதலில் செய்தது.
- தென்னிந்தியாவில் முதன்முதலில் Evolut PRO வால்வை பொருத்தியது
- TAVR க்குப் பிறகு இந்தியாவின் முதல் அடுத்த நாடு வெளியேற்றத்தை நிகழ்த்தியது.



## Dr. செல்வி ராதாகிருஷ்ணன்

MBBS., DNB(Surg), FRCS(Edin), MSc(Clinical Oncology) அவர்கள்
Senior Consultant - Breast Surgery,
Chennai Breast Centre, Chennai.

சிறுவயதிலிருந்தே கல்வியில் நாட்டமும் சமூக நலனில் அக்கறை கொண்டவருமான இவர், 1984ல் பொது அறுவை சிகிச்சைப்பிரிவில் பல்கலைக்கழகத்திலே முதலாவதாக வந்தார்.

பல்வேறு மருத்துவ படிப்புகளுடன் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் பல்வேறு சிறப்புப் பயிற்சிளிலும் தனது திறமையை வளர்த்துக் கொண்ட இவர், தென்னிந்தியாவில் முதல் டிஜிட்டல் மோமோகிராம் இயந்திரத்துடன் பெண்களால் பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் சென்னை மார்பக மையம். மார்பகம் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளுக்கும் ஒரே கூரையின் கீழ் கிடைக்கும்படி அமையப்பட்டுள்ளது.

முதன் முறையாக, பகல் நேரப் பராமரிப்பிலேயே அறுவை சிகிச்சை செய்துகொண்டு அன்றே வீடு திரும்பிவிடும் வசதி, மேலும் மார்பகப் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான கட்டிகளை சேமிக்கும் வங்கி உள்ளடக்கிய ஒரு முழுமையான மாரபகம் சம்பந்தபட்ட அனைத்தும் உள்ளவாறு இந்த மையத்தை உருவாக்கியுள்ளார்.

மார்பக அறுவைசிகிச்சை, கதிரியக்கவியல் மற்றும் பயாப்ஸி குறித்து சென்னையிலும் நாடு முழுவதும் பயிற்சி வகுப்புகள்/பட்டறைகளை நடத்தி வருகிறார்.

The Nature என்ற உலகின் முன்னணி பல்துறை அறிவியல் இதழில் மார்பகப் புற்றுநோயைப் பற்றிய உலகத் தரவுகள் சார்ந்த முக்கிய வெளியீடு வெள்யிட்டு தென்னிந்தியாவிற்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

சரணா அறக்கட்டளை என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் ஏழை பெண்களுக்கு மார்பக புற்றுநோய்க்கான சிகிச்சை வழங்குவதோடு, இந்த அறக்கட்டளை மூலம் பயிற்சிகள், விழிப்புணர்வு வகுப்புகள், செயற்கை மார்பகங்கள் பொருத்துதல் போன்ற பல சேவைகளை அளித்து வருகின்றார்.

பூஜ்ய ஸ்வாமிஜி தயானந்த சரஸ்வதியின் சீடரான இவர் வேதாந்தம், சமஸ்கிருதம், வேத ஜோதிடம் கற்றல் என பல கலைகளை ஆர்வமுடன் கற்று வருகிறார். புத்தகங்களின் மேல் தீராக்காதலும் இவருக்கு உண்டு.

# கொங்கு இரண்டாம் தலைமுறை தொழில்துறை சாதனையாளர்



திரு. **M.P. சூரிய பிரகாஷ்** B.E., M.A. **அவர்கள்**
Executive Director,
Pon Pure Chemical India Pvt. Ltd.,

நாமக்கல் மாவட்டம் கொக்கராயன்பேட்டையை சேர்ந்த திரு. M. பொன்னுசாமி) மனோரஞ்சிதம் தம்பதியருக்கு மூத்த மகனாக 1980 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. M. சூர்யபிரகாஸ் இவர் தனது பள்ளிப்படிப்பை சென்னையில் முடித்தவுடன் KITS PR (Chenical Engng) மற்றும் M.Sc (எகனாமிக்ஸ்) பட்டங்களை பெற்றார் பட்ட படிப்பை முடித்தவுடன் புனேவில் உள்ள Thermax கம்பனியில் பணியில் சேர்ந்தார் ஆனால் அவர் சிறுவயதிலிருந்தே தனது தந்தையின் ஆளுமையையும் அறிவாற்றலையும் கண்டு வளர்ந்ததால் அவரது உள்ளத்தில் Business இல் தனது தந்தையுடன் இணைந்து புதிய உச்சங்களை தொட வேண்டும் என்ற வேட்கையே இலக்காக இருந்தது.

இயற்கையாகவே நல்ல ஞாபகசக்தியும் எந்தவித செயலையும் எளிதில் அரிந்துக்கொள்ளும் ஆற்றலும் ஆண்மீகத்தில் ஆழ்ந்த ஈர்ப்பும் அவருக்கு இருந்தது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் (குறள்) 664 எடுத்துக்கொண்ட இலக்கை முடிக்க வள்ளுவர் காட்டிய குறளுக்கு இணங்க தனது செயல்களையெல்லாம் அவரது லட்சியங்களை நோக்கி PonPure நிறுவனத்தில் 2004 இல் இணைந்து செயல் படுத்த துவங்கினார்.

திரு M.P. சூரியபிரகாஸ் அவர்கள் PonPure நிறுவனத்தின் செயல்திறனை பல்வேறு திசைகளில் முடுக்கிவிட்டார் தமது ஆழ்ந்த ஆர்வத்தின் காரணமாகவும் அவரது பட்ட படிப்பின் அடிப்படையிலும் அவர் PonPure Chemicals இன R&D அமைப்பை ஏற்படுத்தி பலவித புதுமையான Special Chemicals கூட்டுகளை உற்பத்தி செய்து ஆக்கமுடன் ஊக்கமற் பணியாற்றி பல வெற்றிகளை தனது வசமாக்கினார். 2004 ஆம் ஆண்டில் 150 கோடி ஆண்டு வருமானம் கொண்டிருந்த PonPure Chemicals நிறுவனம் இன்று 4200 கோடி கொண்ட நிறுவனமாக மாறுவதற்கு திரு M.P சூர்யப்ரகாஸ் அவர்களும் அவர் தம்பி திரு M.P லட்சுமிபதி அவர்களும் காரணமானவர்கள்.

இத்தனை சாதனைகளை செய்த இவர் PonPure Chemicals நிறுவனத்தின் எல்லையை சிங்கப்பூர் இலங்கை ஆஸ்திரேலியா பங்களாதேஷ் துபாய் ஆகிய

நாடுகளுக்கு விஸ்தரித்து தற்போது 42 நாடுகளில் வியாபாரம் செய்யும் அளவிற்கு PonPure Chemicals நிறுவனத்தை உயர்த்தியுள்ளார்.

இன்றய நிலையில் PonPure Chemicals நிறுவனத்தில் ஏறத்தாழ 20 க்கும் மேற்பட்ட Divisions மற்றும் 1000 கும் மேற்பட்ட ஊழியர்கள் கொண்ட நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

திரு M.P.சூர்யபிரகாஸ் ஒரு தலை சிறந்த வேதியலார் மட்டுமல்லாமல் சிறந்த நிர்வாகியாகவும் திகழ்கிறார். இவரது தலைமையின் கீழ் PonPure Chemicals குழுமம் இன்று 25 பிராந்திய அலுவகங்களை கொண்டு இந்தியாவின் இரண்டாவது பெரிய Chemical Distribution Network என்று திறம்பட நிரவகிக்கிறது மேலும் Asia Pacific: பிராந்தியத்தில் 16 ஆம் இடத்திலும் உள்ளது.

இயற்கை மற்றும் சுற்று சூழலின் பாதுகாப்பும் தன்னுடைய தொழில் நோக்காக கொண்டு உருவாக்கிய VOOKI என்ற Eco-Friendly விட்டு சுகாதார பொருட்களின் வரவேற்பு மக்களிடம் அமோகமாக இருந்தது. Plastic Recycling செய்வதின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த WALK FOR PLASTIC என்று சென்னை நகரில் ஒரு PLASTIC WALKATHON நடத்தி அதில் சேகரித்த Plastic Recycle செய்ததால் ஈட்டிய தொகையை வைத்து 6 சிறுவர் சிறுமியரின் கல்விக்கு உதவி உலக சாதனை புரிந்துள்ளது VOOKI நிறுவனம்.